**செ. கு. எண்: 31** **நாள்: 26.02.2019**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 26.2.2019</u>

இராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ச. சுரேஷ்குமார்;

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், காவல் கட்டுப்பாட்டு அறையில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. வின்செண்ட்;

சென்னை பெருநகரக் காவல், நுண்ணறிவுப் பிரிவில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திருமதி K.B. ஆஷா தேவி கண்ணா;

கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம், நெடுஞ்சாலை ரோந்து பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்த திரு. C. வில்லியம்ஸ்;

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. க. குமார்;

கோயம்புத்தூர் மாநகரம், இராமநாதபுரம் காவல் நிலைய சட்டம், ஒழுங்கு பிரிவில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. சி. விஜயராகவன்;

சென்னை பெருநகரக் காவல், ஜெ.ஜெ. நகர் காவல் நிலைய சட்டம், ஒழுங்கு பிரிவில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. V. கோதண்டபாணி;

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் காவல் நிலையத்தில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ர. ராஜசேகர்;

திண்டுக்கல் மாவட்டம், பட்டிவீரன்பட்டி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ம. சிவபாதகசேகர்;

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. கோ. காமராஜ்;

––––– ஆகியோர் உடல் நலக் குறைவால் காலமானார்கள் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. B. முருகன்;

சென்னை பெருநகரக் காவல், மணலி காவல் நிலைய போக்குவரத்து பிரிவில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. A. ஆறுமுகம்;

திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. க. விவேகானந்தன்;

கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. சு. பாக்கியம்;

திண்டுக்கல் மாவட்டம், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. N. கண்ணன்;

––––– ஆகியோர் சாலை விபத்தில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

உடல் நலக்குறைவு மற்றும் சாலை விபத்துக்களில் உயிரிழந்த **15** காவலர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த மேற்கண்ட **15 காவலர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**